# தினசரி நடப்பு நிகழ்வுகள்

**Useful For**

* TNPSC
* Police
* Bank Exams

மார்ச்

**06**

**06-03-2021**

தினகரன் தி இந்து தினத்தந்தி தினமலர் தினமணி
We Shine Academy™
guiding you to get through

# உலக செய்திகள்

We Shine Academy
Guiding you to get through

- வேளாண் சட்டத்திற்கு எதிராக விவசாயிகள் நடத்தி வரும் போராட்டத்தில் பங்கு பெற்ற பெண்களின் படத்தை பிரபல அமெரிக்க இதழான டைம் அட்டைப் படமாக வெளியிட்டுள்ளது.

We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

# தேசிய செய்திகள்

We Shine Academy
Guiding you to get through

- பிரதமர் நரேந்திர மோடிக்கு 'செரா வீக் சர்வதேச எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் தலைமை விருது' வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் கேம்பிரிட்ஜ் எரிசக்தி ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் இந்த விருது வழங்கப்பட்டது. விருது வழங்கும் விழா பிப்ரவரி 5ல் காணொலி வாயிலாக நடைபெற்றது.

- சுதந்திர இந்தியாவின் 75வது ஆண்டு வரும் 2022ல் கொண்டாடப்படுகிறது. இதை வரும் மார்ச் 12 முதல் அடுத்த ஆண்டு ஆகஸ்ட் 15 வரை 75 வாரங்களுக்கு மாநில அளவிலும் தேசிய அளவிலும் கொண்டாட மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
  - இந்த 75வது ஆண்டு கொண்டாட்டத்தை திட்டமிட பிரதமர் மோடி தலைமையில் 259 உறுப்பினர்களுடன் தேசிய அளவில் ஓர் உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

- அந்த குழுவில் முன்னாள் குடியரசு தலைவர் பிரதீபா பாட்டீல், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஏ.போப்டே, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், 28 மாநில முதல்வர்கள், பெரும்பாலான மத்திய அமைச்சர்கள், சில மாநில ஆளுநர்கள், பாஜக மூத்த தலைவர் அத்வானி இடம் பெற்றுள்ளனர். பிரபல பாடகி லதா மங்கேஷ்வர் போன்ற கலைஞர்கள், நோபல் பரிசு பெற்ற பொருளாதார அறிஞர் அமர்த்தியா சென் ஆகியோரும் உயர்நிலைக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

- வானிலுள்ள இலக்குகளை வானிலிருந்து செலுத்தப்படும் ஏவுகணைகள் மூலமாக துல்லியமாக தாக்கி அழிப்பதற்கான தொழில் நுட்பத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் (DRDO) ஒடிஸாவின் பாலேசுவரம் மாவட்டத்திலுள்ள சண்டீபூர் பகுதியில் மார்ச் 5ல் வெற்றிகரமாக சோதனை செய்தது.
  - இத்தொழில் நுட்பத்தில் திடஎரிபொருளைக் கொண்ட குழாய் வடிவ இயந்திரமானது ஏவுகணையுடன் இணைக்கப்படும். இது ஏவுகணையை ஏவுவதற்கு வழக்கமாக பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தை காட்டிலும் திறன் மிக்கது.

- கேரளாவை சேர்ந்த பானுகலைவாணி என்ற பெண் ‘திருமதி இந்தியா குயின் தமிழ்நாடு’ பட்டம் வென்றுள்ளார்.

- சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நடைபெற்று வரும் புத்தக கண்காட்சியில் ‘வட சென்னை வரலாறும் வாழ்வியலும்’ என்ற புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. எழுத்தாளர் நிவேதிதா லூயிஸ் இப்புத்தகத்தை எழுதியுள்ளார். பொருளாதார நிபுணர் ஜெயரஞ்சன் இப்புத்தக்தை வெளியிட்டார்.

- ராமநாதபுரம் மாவட்டத்தில் கள ஆய்வு செய்து சிந்து சமவெளி நாகரிக எழுத்துகளுடன் கூடிய பழங்கால பானை ஓடுகளை அபிஷேக் என்ற மாணவர் கண்டறிந்தார்.
  - சி.அபிஷேக், எஸ்.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் 2ம் ஆண்டு இயற்பியல் படித்து வருகிறார். இவர் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அரியக்குடி, அரசநகரி, ராஜ சிங்கமங்கலம் உள்ளிட்ட இடங்களில் நடத்திய ஆய்வில் பாசி மணிகள், உடைந்த மண்பாண்டங்கள் எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகளை கண்டறிந்தார்.

- இதை ஆய்வு செய்தவர் தொன்மை குறியீட்டாளர் சுபாஷ் சந்திரபோஸ். இதில் 2 பானை ஓடுகளில் பொறிக்கப்பட்ட எழுத்துகள் தெளிவாக தெரிவதாகவும் 5500-3500 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்து சமவெளி நாகரிகத்துக்கு சான்றாக உள்ள முத்திரைகளில் உள்ள எழுத்து வகையை சார்ந்தது எனவும் தெரிவித்தார்.

- கர்நாடக மாநில அரசின் விவசாயத் துறையின் தூதராக நடிகர் தர்ஷன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவரை தூதராக நியமிக்கும் விழா பெங்களுரில் மார்ச் 5ல் நடைபெற்றது.

We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

- மார்ச் 8ம் தேதி மகளிர் தினத்தை முன்னிட்டு ஆந்திராவில் பெண்கள் பாதுகாப்பு ‘ஆ.்.ப்’-ஆன தி ஷா செல்போன் செயலியை பதிவிறக்கம் செய்யும் பெண்கள் வாங்கும் மொபைல்களுக்கு 10% தள்ளுபடி வழங்குவதாக ஆந்திர மாநில அரசு அறிவித்துள்ளது.
  - மேலும் மார்ச் 8 மகளிர் தினத்தில் அனைத்து பெண்கள் காவல் துறையினருக்கும் விடுமுறை அறிவித்துள்ளது.

- இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழக பிரிவு தலைவராக டாக்டர் எஸ்.சந்திர குமார் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

- தினமலர் முன்னாள் ஆசிரியரும், நாணயவியல் அறிஞருமான இரா.கிருஷ்ண மூர்த்தி மார்ச் 4ல் காலமானார்.
  - சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக முனைவர் இரா.கிருஷ்ணமூர்த்தி தினமலர் நாளிதழ் ஆசிரியராக பணியாற்றினார்.
  - இவர் சங்க காலத்தில் பழந்தமிழ் மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களை கண்டுபிடித்து பெரும் ஆய்வு மேற்கொண்டவர்.
  - 2012-2013 ஆண்டுக்கான தொல் காப்பியர் விருது குடியரசுத்தலைவரால் இவருக்கு வழங்கப்பட்டது.

# Expected Questions

1. வேளாண் சட்டத்திற்கு எதிராக விவசாயிகள் நடத்தி வரும் போராட்டத்தில் பங்கு பெற்ற பெண்களின் படத்தை எந்த இதழ் அட்டைப் படமாக வெளியிட்டுள்ளது?

விடை: அமெரிக்க இதழான டைம்

2. ‘செரா வீக் சர்வதேச எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் தலைமை விருது’ யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?

விடை: பிரதமர் நரேந்திர மோடி

3. பிரதமர் நரேந்திர மோடிக்கு 'செரா வீக் சர்வதேச எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் தலைமை விருது' எந்த நிறுவனம் சார்பில் வழங்கப்பட்டுள்ளது?

விடை: அமெரிக்காவின் கேம்பிரிட்ஜ் எரிசக்தி ஆராய்ச்சி நிறுவனம்

4. சுதந்திர இந்தியாவின் 75வது ஆண்டு எந்த வருடம் கொண்டாடப்படுகிறது?

விடை: 2022

We Shine Academy Guiding you to get through

5. சுதந்திர இந்தியாவின் 75வது ஆண்டு விழாவை எத்தனை வாரங்கள் கொண்டாட மத்திய அரசு முடிவு செய்துள்ளது?

விடை: 75 வாரங்கள்

We Shine Academy Guiding you to get through

6. சுதந்திர இந்தியாவின் 75வது ஆண்டு விழாவை எப்போது கொண்டாட மத்திய அரசு முடிவு செய்துள்ளது?

விடை: 12, மார்ச் 2021 முதல் 15, ஆகஸ்ட் 2022

7. 2021ம் ஆண்டுக்கான ‘திருமதி இந்தியா குயின் தமிழ்நாடு’ என்ற பட்டத்தை வென்றவர் யார்?

விடை: கேரளாவை சேர்ந்த பானுகலைவாணி

We Shine Online Classes

8939 144 344 | 8939 244 344

8. ‘வட சென்னை வரலாறும் வாழ்வியலும்’ என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார்?

விடை: நிவேதிதா லூயிஸ்

We Shine Academy Guiding you to get through

9. சிந்து சமவெளி நாகரிக எழுத்துகளுடன் கூடிய பழங்கால பானை ஓடுகளை கண்டறிந்தவர் யார்?

விடை: அபிஷேக்

We Shine Academy Guiding you to get through

10. கர்நாடக மாநில அரசின் விவசாயத் துறையின் தூதராக யார் நியமனம் செய்யப்பட்டுள்ளார்?

விடை: தர்ஷன்

11. ஆந்திராவில் பெண்கள் பாதுகாப்பு செயலியின் பெயர் என்ன?

விடை: தி ஷா

12. மகளிர் தினத்தை முன்னிட்டு அனைத்து பெண்கள் காவல் துறையினருக்கும் விடுமுறை என்று எந்த அரசு அறிவித்துள்ளது?

விடை: ஆந்திர மாநில அரசு

13. இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழக பிரிவு தலைவராக யார் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்?

விடை: டாக்டர் எஸ்.சந்திர குமார்

14. தினமலர் முன்னாள் ஆசிரியரும், நாணயவியல் அறிஞருமான இரா.கிருஷ்ண மூர்த்தி என்று காலமானார்?

விடை: மார்ச் 4

15. 2012-2013 ஆண்டுக்கான தொல் காப்பியர் என்ற விருதினை பெற்றவர் யார்?

விடை: இரா.கிருஷ்ண மூர்த்தி

# March 5th Quiz Questions and Answers

We Shine Online Classes
8939 144 344 | 8939 244 344

இந்தியாவின் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையின் பெயர் என்ன?

a) பிரிதிவி

b) திரிசூல்

c) அக்னி

d) ஆகாஷ்

We Shine Online Classes

8939 144 344 | 8939 244 344

"தங்கப் போர்வை நாடு" எனப்படுவது?

a) கொரியா

b) ஆஸ்திரேலியா

c) பெல்ஜியம்

d) நார்வே

We Shine Academy
Guiding you to get through

குறிஞ்சி மலர் என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?

a) ஜெயகாந்தன்

b) அகிலன்

c) தி.ஜானகிராமன்

d) நா.பார்த்தசாரதி

புத்த சரித்திரத்தின் ஆசிரியர் யார்?

a) அஸ்வகோஷா

b) பார்சவா

c) வசுமித்திரா

d) பாணபட்டர்

இந்தியாவில் மேற்கத்திய கல்வி முறைக்கு வித்திட்டாவர் யார்?

a) உட்ஸ்

b) சார்ஜெண்ட்

c) மாண்டேகு

d) மெக்காலே

We Shine Academy Guiding you to get through

# Today Quiz

We Shine Academy
Guiding you to get through

இந்தியாவின் முதல் சர்வதேச பெண்கள் வர்த்தக மையம் எந்த மாநிலத்தில் அமைக்கப்படுகிறது?

a) கர்நாடகா

b) கேரளா

c) தமிழ்நாடு

d) ஆந்திரா

We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

உலகின் முதல் **CRISPR Cas-9** அடிப்படையிலான கண்டறியும் கருவி யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?

**a)** ரிலையன்ஸ்

**b)** டாடா

**c)** எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம்

**d)** அண்ணா பல்கலைக்கழகம்

நாகோர்னோ-கராபாக் எவர்களுக்கு இடையேயான சர்ச்சைக்குரிய பகுதி?

a) இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம்

b) இந்தியாவும் நேபாளமும்

c) சிரியா மற்றும் ஈராக்

d) அஜர்பைஜான் மற்றும் ஆர்மீனியா

பிஎஸ்எல்வி-சி 49 ராக்கெட்டில் எத்தனை செயற்கைக்கோள்கள் ஏவப்பட்டன?

a) 8

b) 9

c) 10

d) 11

We Shine Online Classes

8939 144 344 | 8939 244 344

டைக்ரே நெருக்கடி எந்த நாட்டுடன் தொடர்புடையது?

a) ஹாங்காங்

b) சிரியா

c) எத்தியோப்பியா

d) பாலஸ்தீனம்

We Shine Online Classes

8939 144 344 | 8939 244 344

# திருக்குறள்

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக
கொள்வர் பயன்தெரி வார்"

**விளக்கம்:**

ஒருவர் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயன் தெரிந்தவர்கள், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்.

# மிக்க நன்றி

We Shine Academy
Guiding you to get through